

ශීර්ෂ අංක 04 - කාර්ය සාධන වාර්තාව 2020

උපරිමාධිකරණ විනිශ්චයකාරවරු

செலவுத்தலைப்பு இல.04 - செயலாற்றுகை அறிக்கை 2020

உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

PERFORMANCE REPORT 2020 - HEAD 04

JUDGES OF THE SUPERIOR COURT

2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
உயர் நீதிமன்ற நீதியரசர்கள் - செலவினத் தலைப்பு இல. 04

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனிதவள விவரம்

அத்தியாயம் -7 - இணக்க அறிக்கை

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.a உயர் நீதிமன்றம்

1. a1 அறிமுகம்

இலங்கை நீதிமன்ற முறைமையிலுள்ள உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகும். இது பிரதம நீதியரசர் மற்றும் 16 உயர் நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்டதாகும். இவர்கள் அனைவரும் அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். ஏனைய சகல நீதிமன்றங்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு உரித்தாவதுடன், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தின் தத்துவம் செயற்படுத்தப்படுகின்றது.

1. a2 நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுத்திட்டம் (சட்டம், நம்பிக்கை, ஏனையன)

இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XIV மேனிலை நீதிமன்றங்கள் என்ற அத்தியாயத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தின் பொது நியாயாதிக்கம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் அரசியலமைப்பு சார்ந்த நியாயாதிக்கம் 118 முதல் 136 வரையான உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

20 ஆம் திருத்தத்தினால் மேலே குறிப்பிட்ட யாப்பின் 119 ஆம் உறுப்புரை திருத்தப்பட்டு உயர் நீதிமன்றமானது பிரதம நீதியரசர் மற்றும் 06 க்கு குறையாத 16 க்கு மேற்படாத நீதியரசர்களைக் கொண்டிருக்குமென திருத்தப்பட்டது.

1.3 நிறுவனத்தின் குறிக்கோள்

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கேற்ப நீதித்துறையின் வினைத்திறன்மிக்க நிருவாகம்

1. a4 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

“அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களை நடைமுறைப்படுத்தி வினைதிறனுடன் நீதி நிருவாக செயற்பாட்டை செயற்படுத்தி இலங்கை மக்களின் நம்பிக்கையை பாதுகாத்தலும் அதனூடாக மக்களை மேம்படுத்தலும்”

மிகவும் குறுகிய காலத்தினுள் நியதிச்சட்ட தத்துவங்களை நடைமுறைப்படுத்தி நீதியை நிருவகித்தல்.

அரசியலமைப்பினால் உயர்நீதிமன்றத்துக்கு பின்வரும் தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கம்.
- இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கம்.
- அறிவுறுத்தல் நியாயாதிக்கம்.
- ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு தொடர்பான நியாயாதிக்கம்.
- ஏதேனும் முறையிலான பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பான நியாயாதிக்கம்.
- பாராளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் உரித்தாக்கப்படுகின்ற நியாயாதிக்கம்.

1. a5 பிரதான செயற்பாடுகள்

- அரசியல் யாப்பு செயற்பாடு தொடர்பான நீதிமன்ற நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- அறிவுறுத்தல் நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- தேர்தல் ஆட்சேபனை மனு (ஜனாதிபதி தேர்தல்) தொடர்பான நியாயாதிக்கத்தையும், ஏதேனும் முறையிலான பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பான நியாயாதிக்கத்தையும் நடைமுறைப்படுத்துதல்.
- சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் உரித்தாக்கும் அல்லது ஆணையிட்டளிக்கும் அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- சட்டத்தரணிகளை சேர்த்துக்கொள்ளுதல், இடைநிறுத்துதல் மற்றும் நீக்குதல்.

இச்செலவுத் தலைப்பின் கீழ் உயர் நீதிமன்ற கௌரவ நீதியரசர்களின் சம்பளம் மற்றும் வேதனங்கள், ஏனைய மீண்டெழும் செலவினங்கள் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு என்பன உள்ளடங்குகின்றன.

1. **a 6 நிறுவன ரீதியிலான குறிப்புக்கள்**

பொருந்துவதில்லை.

1. a 7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் செயற்றிட்டங்களின் விபரங்கள். (ஏதேனுமிருப்பின்)

ஒன்றுமில்லை.

1.b மேன்முறையீட்டு நீதிமன்றம்

1.b1 அறிமுகம்

அரசியலமைப்பின் 137 ஆவது உறுப்புரையின் மூலம் நிறுவப்பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றமானது இலங்கை நீதிமன்ற முறைமையில் இரண்டாவது மேன்நிலை நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும் நீதிமன்ற முறைமையாகும்.

மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் தலைமையில் இருபது கௌரவ நீதிபதிகளை கொண்டுள்ளது.

ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால், நியாயசபையால் அல்லது வேறு நிறுவனத்தால் புரியப்பட்டதான நிகழ்வுப் பிழைகள் அல்லது சட்டப் பிழைகள் எல்லாவற்றையும் திருத்துவதற்கான மேன்முறையீட்டு நியாயதிக்கத்தையும் எழுத்தாணை மற்றும் தடையீட்டெழுத்தாணை என்பவற்றை பிறப்பிக்கும் தத்துவத்தையும் பாராளுமன்றத் தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் தத்துவத்தையும் முதநிலை நீதிமன்றங்களின் வழக்குப்பதிவேடுகளை பரிசோதனையிடும் தத்துத்தையும் கட்டுக்காவலிலுள்ளவர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டுவருவதற்கும் விட்டுவிடுவதற்குமான அதிகாத்தையும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக நடைமுறைப்படுத்துதல்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் சாதாரணமாக அதன் நியாயாதிக்கத்தை கொழும்பிலேயே பிரயோகிக்குமென்பதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு நீதிபதிகளின் ஏகமானதான முடிவொன்றாக இல்லாதிருப்பின் அது வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுள் பெரும்பான்மையோரின் முடிவாக இருக்கும்.

மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகம் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் எனப் பதவிப்பெயருடைய அலுவலரொருவரின் பொறுப்பில் இருப்பதுடன், அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் கண்காணிப்புக்கும் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் கீழ்பட்டவர்.

1. b 2 நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுத்திட்டம் (சட்டம், நம்பிக்கை, ஏனையன)

இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XVI- மேனிலை நீதிமன்றங்கள் என்ற அத்தியாயத்தின் 137 ஆம் உறுப்புரையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றம் விபரிக்கப்பட்டுள்ளதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் 138 ஆம் உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 139 முதல் 147 வரையான உறுப்புரைகளில் அதன் தொழிற்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன.

மேலே கூறப்பட்ட உறுப்புரைக்கான 20 ஆம் திருத்தத்தின் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரையும் ஆறு பேருக்குக் குறையாத பத்தொன்பது பேருக்கு அதிகமாகாத வேறு நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

1.b. 3 நிறுவனத்தின் குறிக்கோள்

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கேற்ப நீதித்துறையின் வினைத்திறன்மிக்க நிருவாகம்

1. b 4 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

“அடுத்த புதிய தசாப்தத்தில் நீதி நிருவாக செயற்பாட்டை வினைதிறனுடன் நிறைவேற்றுதல்”.

கணினி தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி வழக்காடிகளுக்கு சிறந்த வசதிவாய்ப்புக்களை வழங்கும் விதத்தில் வினைதிறனுடன் நீதி நிருவாகத்தை பிரயோகித்தல்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினூடாக நிறுவப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றமானது முதனிலை நீதிமன்றங்கள், தொழிலாளர் நியாயசபைகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட சபைகளின் தீர்ப்புக்கள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீள்நோக்கு தத்துவத்தைக் கொண்டுள்ளது. மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எழுத்தாணை தொடர்பான நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நியாயாதிக்கமும் உள்ளது. அத்துடன், 2002 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைகளின் போது பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கும் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் போது பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கும் சட்டங்கள் முதலியவற்றில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தேவையான கட்டளைகளையும் சட்ட ஒழுங்குகளையும் வழங்குதல், மற்றும் ஏதேனுமொரு முதனிலை நீதிமன்றத்தின் அல்லது தொழிலாளர் நியாய சபைகளின் அல்லது ஏனைய நிறுவனமொன்றின் வழக்குப் பதிவேடுகளை சோதனையிடவும் அல்லது பரீட்சிப்பதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு தத்துவமும் அதிகாரமும் உண்டு.

1. b5 பிரதான செயற்பாடுகள்

- மேல் நீதிமன்றம் உட்பட முதனிலை நீதிமன்றங்களின் தீர்வுகளுக்கெதிரான முன்முறையீடுகளையும் மீள்நோக்கலையும் விசாரணை செய்தல்.
- ஏனைய நியதிச்சட்ட சபைகளுக்கெதிரான மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்
- முதனிலை நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளை அந்நீதிமன்ற தத்துவமுள்ள நீதிமன்றமொன்றுக்கு மாற்றுவதற்கான விண்ணப்பத்தை பரிசீலித்தல்.
- நீதிமன்றத்தை அவமதித்ததல் தொடர்பாக விசாரணை செய்தல்.
- தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.

1. **b 6 நிறுவன ரீதியிலான குறிப்புக்கள்**

பொருந்துவதில்லை.

1. b 7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் செயற்றிட்டங்களின் விபரங்கள். (ஏதேனுமிருப்பின்)

ஒன்றுமில்லை.

அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

2.a உயர் நீதிமன்றம்

கிடைக்கத்தக்க மனிதவள மற்றும் பௌதீக வளங்களை வினைதிறனுடன் முகாமைத்துவம் செய்தும் நீதி நிருவாகத்தினை செயற்படுத்தியும் பொது மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் உயர்நீதிமன்றத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை அதிகபட்சளவில் நிறைவேற்றுதல்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தின் 2020.01.01 முதல் 2020.12.31 வரையிலான செயலாற்றுகை

வழக்குகளின் தன்மை	**2020/01/01 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை**	**2020/01/01 முதல் 2020/12/31 வரை தாக்கல் செய்த வழக்குகளின் எண்ணிக்கை**	**2020/01/01 முதல் 2020/12/31 வரை தீர்க்கப்பட வேண்டிய மொத்த வழக்குகளின் எண்ணிக்கை**	**2020/01/01 முதல் 2020/12/31 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**	**2019/09/30 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை**
அடிப்படை உரிமைகள் தொடர்பான விண்ணப்பங்கள்	1153	350	1503	287	1216
விஷேட அனுமதிக்கான விண்ணப்பங்கள்	555	240	795	199	596
பாராளுமன்ற சட்ட மூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றக் கட்டளைகள்	0	40	40	38	025
மேன்முறையீட்டு வழக்குகள்	1227	111	1338	101	1237
வணிக மேல் நீதிமன்ற முன்முறையீட்டு வழக்குகள்	468	27	495	31	464
மேல் நீதிமன்ற மேன்முறையீட்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள்	95	108	203	48	155
எழுத்தாணை விண்ணப்பம்	08	12	20	08	12
மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீட்டு வழக்குகள்	740	375	1115	231	884
மீள்நோக்கு வழக்குகள்	05	04	09	03	06
அரசியலமைப்பின் பொருட் கோடல்கள் தொடர்பான வழக்குகள்	0	0	0	0	0
நானாவித வழக்குகள்	09	02	11	0	11
நீதாய நீதிமன்றத் தீர்ப்பு மேன்முறையீடுகள்	01	02	03	0	03
விஷேட மேன்முறையீடுகள்	0	01	01	0	01
நீதிமன்றத்தை அவமதித்தல் வழக்குகள்	24	08	32	20	12
சட்ட விதி வழக்குகள்	09	01	10	01	09
சட்டத்தரணிகளை நீக்கும் வழக்குகள்	0	02	02	0	01
துரிதப்படுத்தல் வழக்குகள்	0	02	02	01	01
மொத்தம்	**4294**	**1284**	**5578**	**968**	**4610**

பதிவாளர் - உயர் நீதிமன்றம்

2.b மேன்முறையீட்டு நீதிமன்றம்

மேன்முறையீட்டு நீதிமன்றம் 3 பதிவறைகளை நிர்வகிக்கின்றது. அங்கு விசாரிக்க வேண்டியுள்ள மற்றும் விசாரணைகள் முடிவடைந்துள்ள வழக்கு வகைகள் உள்ளடங்கிய பெரியதொரு தரவுத்தளம் உள்ளது. அப்பதிவறைகளில் புதியதொரு முறைமைக்கேற்ப வழக்கு அறிக்கைகளை களஞ்சியப்படுத்தவும் வழக்கிலங்களை அடையாளக் குறியிடவும் (Barcode) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவ்விதத்தில் ஒவ்வொரு வழக்கு வகைக்கேற்ப வழக்குகளை களஞ்சியப்படுத்தி தேவைப்படும் போது அவற்றை பரீட்சிக்க இலகுவானதொரு முறை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது வரிக்குறியீட்டு இலக்கமிடல் முறை மூலம் வழக்கு முகாமைத்துவ முறைமையுடன் (Case Management system) தொடர்புபடுகின்றது.

வழக்குக் கட்டணம், பிரதிபண்ணற் கட்டணம் போன்ற நிர்வாக ரீதியான கட்டணங்களை அறவிடும் போது கணிணிமயப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களை வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, உரிய கணக்கறிக்கைகளை கணிணி முறைமையைப் பயன்படுத்தி தன்னியக்க உருவாக்கம் மூலம் தயார்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பட்டியலிடல் பிரிவு வழக்கு முகாமைத்துவ முறைமை மூலம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, மிகச்சரியாகவும் வினைதிறனுடனும் வழக்குகளை பட்டியலிடுதல், வலைத்தளத்தை நிர்வகித்தல், வழக்காடிகளின் அறிவுறுத்தலுக்காக கூப்பிடும் வழக்குகள் தொடர்பான விபரங்களை நாளாந்தம் இற்றைப்படுத்தி காட்சிப்படுத்ததுல் ஆகிய பணிகள் இடம்பெறுகின்றன.

பட்டியலிடும் பிரிவும், பதிவாளர் மற்றும் பிரதிப் பதிவாளர்களும் அனைத்து பதிவறைகளுடன் வழக்கு முகாமைத்துவ முறைமையின் மூலம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். அதனூடாக, உரிய உத்தியோகத்தருக்கு ஏதேனும் ஒரு வழக்கறிக்கையின் விபரத்தை பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனை சட்டத்தரணிகள் மற்றும் வழக்காடிகள் பரிசீலிக்கும் விதத்தில் வியாபிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிகவும் வினைதிறன்மிக்க பயனுறுதிவாய்ந்த மக்கள் சேவையை உறுதிப்படுத்துவதற்காக மேன்முறையீட்டின் வழக்குக்கோவைகளை இலத்திரனியல் வடிவமைப்பு(e-format)க்கு மாற்றுவதற்கும் இலத்திரனியல் ஆவணப்படுத்தல் முறை மூலம் அதனை நிர்வகிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வலைத்தளத்தை நவீனமயப்படுத்தி கையடக்கத் தொலைபேசிச் செயலியை அறிமுகப்படுத்தி வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை செயல்திறனுடன் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேன்முறையீட்டு அலுவலகம், நீதிபதிகள் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் திறந்த நீதிமன்றங்கள் ஆகிய அனைத்தையும் கணிணி வலைப்பின்னலுக்குள் உட்படுத்தி கடதாசி ஆவணங்களின் சுற்றோட்டத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்
2020.01.01 முதல் 2020.12.31 வரையிலான செயலாற்றுகை

	வழக்கு வகை	2020/01/01 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை	2020/01/01 முதல் 2020/12/31 வரை பதிவாகிய வழக்குகளின் எண்ணிக்கை	2020/01/01 முதல் 2020/12/31 வரை தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2020/12/3101 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை
01	தடை உத்தரவுகள்	569	466	166	869
02	உரிமைக் கோரிக்கைகள்	105	139	71	173
03	விஷேட அனுமதிக்கான விண்ணப்பங்கள்	23	05	03	25
04	குத்தகை	152	18	0	170
05	நீதவான் நீதிமன்றத்தின் மீளாய்வு வழக்குகள்	06	03	03	06
06	காணி கையகப்படுத்தல் வழக்குகள்	07	01	0	08
07	நீதிமன்றத்தை அவமதித்தல் வழக்குகள்	24	09	02	31
08	Restitution in Intergrum	26	17	03	40
09	ஆட்கொணர் வழக்குகள்	02	03	03	02
10	சட்டத்தரணிகளை நீக்குதல் தொடர்பான வழக்குகள்	0	01	0	01
11	இஸ்லாமிய திருமணச் சட்டம்	04	01	0	05
12	தடைக் கட்டளைகள்	0	03	03	0
13	காணாமற் போனோர் தொடர்பான வழக்குகள்	01	01	0	05
14	பிணை தொடர்பான வழக்குகள்	01	42	36	07
15	நீதிமன்றத்தை மாற்றுதல் தொடர்பான வழக்குகள்	04	04	04	04
16	மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடு	423	12	02	433
17	மேல் நீதிமன்ற – குற்றவியல் வழக்குகள்	796	253	03	1046
18	மீளாய்வு வழக்குகள்	07	01	0	08
19	தேர்தல் மனு தொடர்பான வழக்குகள்	0	0	0	0
20	நடுத்தீர்ப்புச் சட்டம்	05	01	0	06
21	மாவட்ட நீதிமன்றங்களின் மேன்முறையீடுகள்	0	0	0	60
22	தகவல் அறியும் சட்டம்	02	01	0	03
23	நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை	0	0	0	0
	மொத்தம்	**2220**	**981**	**299**	**2902**

பதிவாளர் - மேன்முறையீடு

அத்தியாயம் 03 – வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிக்கூற்றானது அரச கணக்கீட்டுக் கிளைக்காக கணக்கீட்டுத் தரநியமங்களின் இல. 01 இன் வேண்டுகோளுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.

3.2 ஒதுக்கப்பட்ட நிதிப் (இருப்பின்) பயன்பாட்டின செயலாற்றுகை.

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை.

நன்கொடைகள் அல்லது ஏனைய வரவுகள் இல்லை

3.4 நிதி அல்லாத சொத்துக்களின் செயலாற்றுகை

நிதி அல்லாத சொத்துக்கள் இல்லை.

3.5 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

3.1 நிதிக்கூற்றானது அரச கணக்கீட்டுக் கிளைக்காக கணக்கீட்டுத் தரநியமங்களின் இல. 01 இன் வேண்டுகோளுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.

ஏசீஎ- ஸ்

2020 டிசம்பர் 31ஸ் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2020		குறிப்பு	உண்மை நிலை 2020	2019	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஎ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானம் பெறுகைகள்		-	-	
-	நிறைசேரி பனிமுற்பணங்கள்		226,422,000	247,250,000	ஏசீஎ-3
-	ஸ்பைகள்				ஏசீஎ-4
-	முற்பணக் கணக்குகள்		399,876	384,540	ஏசீஎ-5
-	ஏனைய பெறுகைகள்		4,474,330	4,176,508	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		231,296,206	251,811,048	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		231,296,206	251,811,048	
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
202,750,000.00	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய வழியல் அனுகூலங்கள்	5	177,674,456	164,303,832	
57,300,000.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	40,531,917	47,852,218	ஏசீஎ-2(ii)
280,000.00	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	7	103,771	151,523	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
260,330,000.00	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)		218,310,144	212,307,573	
	மூலதனம் செலவினம்				
1,450,000.00	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	1,891,250	949,445	
2,450,000.00	மூலதன சொத்துக்களின் கொள்வனவு	11	8,156,231	2,005,790	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஎ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
64,000,000.00	மனித வள அபிவிருத்தி	14	2,751,942	36,292,458	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
67,900,000.00	மொத்த மூலதனம் செலவினம் (உ)		12,799,422	39,247,692	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)		1,832,742	322,360	
	கைப்பற் கொடுப்பனவுகள்		-	-	ஏசீஎ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		1,832,742	322,360	ஏசீஎ-5
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)		232,942,308	251,877,625	
-	2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான பனிமுற்பண மீதி ஏ = (இ-எ)		(1,646,102)	(66,577)	

1

ஏசீஜ -டீ

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2020 ரூபா	2019 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஜ-6	594,911,944.61	6,305,714.01
நிதி சொத்துக்கள்			
முறைமைக் கணக்குகள்	ஏசீஜ-5/5ஜ	1,981,225.00	548,359
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஜ-3	186,640.13	-
மொத்த சொத்துக்கள்		**597,079,809.74**	**6,854,073**
நேரிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
நேரிய பெருமதி		1,981,225.00	548,359
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		594,911,944.61	6,305,714.01
வாடகை மற்றும் பணி முறைமை ஒதுக்கம்	ஏசீஜ-5ஐ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்பக கணக்குகள்	ஏசீஜ-4	-	-
பணிமுற்பண மீதி	ஏசீஜ-3	186,640.13	-
மொத்தப் பொறுப்புக்கள்		**597,079,809.74**	**6,854,073**

பக்க இலக்கம் 01 முதல் 46 வரை ஏசீஜ 1 முதல் ஏசீஜ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 47 முதல் 55 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த நிறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறமைரிப் புதகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இதனால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி :

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி :

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்
திகதி :

H.A.P. SURANGA
Accountant
Supreme Court
Colombo - 12.

Pradeep Mahamuthugala
Additional Magistrate
Registrar
Supreme Court
Colombo - 12,
Sri Lanka.

Pradeep Mahamuthugala
Additional Magistrate
Registrar
Supreme Court
Colombo - 12,
Sri Lanka.

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	உண்மை	
	2020 ரூபா	2019 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், நன்னைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	120,072	393,352
ஏனைய செலவின தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	226,422,000	247,250,000
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**226,542,072**	**247,643,352**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்	213,852,115	245,650,597
மானியங்களும் மாற்றல் கொடுப்பனவுகளும்	103,771	151,523
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	-	-
நிறைவேற்றுத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	186,640	119,313
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**214,142,526**	**245,921,433**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**12,399,546**	**1,721,920**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
பொதிகை சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை	-	-
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை	399,876	384,540
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**399,876**	**384,540**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதிகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	12,799,422	1,969,990
முற்பணக் கொடுப்பனவுகள்	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**12,799,422**	**1,969,990**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(12,399,546)**	**(1,585,450)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ+ஊ)	**-**	**136,470**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
கிடைக்கப்பெற்ற வைப்புகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
	-	-
வைப்புகளின் கொடுப்பனவு		136,470
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)		**136,470**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**(136,470)**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)-(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.2 ஒதுக்கப்பட்ட நிதியை (இருப்பின்) பயன்படுத்திக்கொள்ளும் செயலாற்றுகை

(ரூபாய். 000)

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட நிதி		உண்மை செலவு	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல்	இறுதி		
உயர் நீதிமன்றம்				
மீண்டெழும்	115,150	119,524	109,204	91.36%
மூலதனம்	10,060	18,916	8,864	46.86%
மேன்முறையீட்டு நீதிமன்றம்				
மீண்டெழும்	109,210	114,49	109,105	95.33%
மூலதனம்	8,850	21,318	3,935	18.46%
மொத்த ஒதுக்கீடு				
மீண்டெழும்	224,360	233,973	218,310	93.3%
மூலதனம்	18,910	40,234	12,799	31.18%

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை.

- ஒன்றுமில்லை -

3.4 நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை

(ரூபாய். 000)

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2020 ஆந் திகதிக்கு பொருட் கணிப்பீட்டு அறிக்கைக்கேற்ப மீதி	31.12.2020 ஆந் திகதிக்கு நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்பட வேண்டியது	முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல்.
9152	இயந்திரம் மற்றும் உபகரணங்கள்	594,912	594,912	-	100

3.5 கணக்காய்வாளரின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

Mu No :- JP A/A/ESC/02/FA/20 திகதி :- 2021 மே 05

பதிவாளர் (கணக்கீட்டு உத்தியோகத்தர்)

உயர் நீதிமன்றப் பதிவாளர்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 11(1) நியதிகளுக்கேற்ப 2020 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் (தலைப்பு 234) சாராம்ச அறிக்கை.

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் 2020 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றுகைக் கூற்று, காசு பாய்ச்சற்கூற்று உள்ளடக்கிய 2020 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இவ்வறிக்கை 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் உபபிரிவு 11(1) இன் பிரகாரம் உயர் நீதிமன்ற அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகளை உள்ளடக்கியுள்ளது. அத்துடன், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) உடன் இணைத்து வாசிக்கக்கூடிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளை அனுசரித்து தயாரிக்கப்பட்டுள்ள குறித்த அறிக்கையானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் உபபிரிவின் கீழ் உரிய காலத்தில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, 271/2019 ஆம் இலக்க மற்றும் 2020 திசெம்பர் 03 ஆந் திகதியுடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2020 திசம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையின் கீழ் சரியாகவும் நியாயமாகவும், மேலும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வுகளை நடாத்தி அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளள வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

முழு நிதிக்கூற்றிலும் மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ்கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கைகையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்விடல் தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப்படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ்கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

இலங்கை கணக்காய்விடல் தரநியமங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் ஐயுறவினை பேணுகின்றேன். மேலும்,

- நான், மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக்கூற்றுக்களின் முக்கியமான பிறழ்கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் கணக்காய்வு செயன்முறைகளை திட்டமிட்டும் பயன்படுத்தியும், எனது கருத்துரைக்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்கு போதியளவிலான பொருத்தமான கணக்காய்வு சான்றினையும் பெற்றுக்கொள்கிறேன். மோசடியின் விளைவினாலான ஆனால் கண்டறியப்படாத முக்கிய பிறழ்கூற்றின் ஆபத்தானது தவறினாலான ஆபத்தினை விடவும் மிகவும் உயர்வானது. ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதிக்கும், உள்நோக்குடைய புறக்கணிப்புக்களுக்கும், பிறழ்கூற்றுக்களுக்கும் அல்லது உள்ளகக் கட்டுப்பாடு மீறப்படுவதற்கும் காரணமாக அமையும்.
- நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைதிறன் தொடர்பாக கருத்தினை முன்வைக்கும் நோக்கத்திற்கல்லாது, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயன்முறைகளை திட்டமிடுவதற்காக கணக்காய்வுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கத்தினை நான் பெற்றுக்கொள்கிறேன்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தையும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் நான் மதிப்பீடு செய்கிறேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினையும், மேலும் குறித்த நிதிக்கூற்றுக்கள் நியாயமான முன்வைப்பாக இருக்கும் விதத்தில் அடிப்படையான பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றனவா எனவும் மதிப்பீடு செய்கிறேன்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டிலிருந்த குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க கணக்காய்வுத் தேடல்கள் தொடர்பாக சாட்டப்பட்டுள்ளவர்களுடன் நான் கலந்துரையாடுகிறேன்.

1.5 ஏனைய சட்ட ரீதியானத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் உபபிரிவு 6(ஈ) இனால் வேண்டப்படுவதன் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முந்திய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முந்திய வருடத்துடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டன.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 செலவினத் தலைப்பை மாற்றி செலவு செய்தல்

(அ) செலவுத் தலைப்பு 04 க்கு உரித்தான 02 வாகனங்களின் காப்புறுதிக் கட்டணமான ரூபா. 61,948 செலவுத் தலைப்பு இல. 234-01-01-1301 இன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செலவுத் தலைப்பு 234 க்கு உரித்தான 03 வாகனங்களின் காப்புறுதிக் கட்டணமான ரூபா. 77,436 செலவுத் தலைப்பு இல. 04-01-01-1301 இன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) செலவுத் தலைப்பு 234 க்கு உரித்தான ஒரு ஓதுக்க வாகனத்தின் ரூபா. 482,550 பெறுமதியான திருத்தச் செலவுகள் செலவுத் தலைப்பு 04-01-01-1301 மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

2102 மற்றும் 2103 செலவுத் தலைப்புக்களுக்காக குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் முறையே ரூபா. 9,570,000 மற்றும் ரூபா. 11,754,000 வும், நிதிப் பிரமாணம் 66/69 இனை மாற்றுவதன் மூலம் முறையே ரூபா. 3,200,000 மற்றும் ரூபா. 2,297,000 உம், மேலும், ரூபா. 12,770,000 மற்றும் ரூபா. 14,051,000 வும் மேலதிக நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் வருட முடிவில் குறித்த செலவுத் தலைப்புக்களிலிருந்து முறையே ரூபா. 12,545,288 மற்றும் ரூபா. 7,879,482 மீதியாக இருந்ததனால் எந்த விதமான திட்டமுமின்றி மேலதிக நிதி ஒதுக்கீடு செய்துகொள்ளப்பட்டிருந்தது.

2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்.

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியுடைய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் வழிகாட்டல் இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிட்டுள்ள 3, 4 பந்திகளுக்கு அமைவாக கணக்கில் குறிப்பிட்டுள்ள இல. iii இன் கீழ் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி கூற்றானது திறைசேரி மூலம் ஒவ்வொரு செலவுத் தலைப்புக்கள் தொடர்பாக வெளியிடப்படுகின்ற பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றுடன் இணக்கமாக இருக்க வேண்டியிருந்தாலும் திறைசேரியின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 1,180,529 பெறுமதியான 14 பொறுப்புக்கள் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியுடைய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் வழிகாட்டல் இலக்கம் 06 இன் 3 மற்றும் 4 ஆம் பந்திகளுக்கு அமைவாக திறைசேரியினால் வெளியிடப்படுகின்ற பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் அறிக்கையிடாத எத்தகைய கடப்பாடு அல்லது பொறுப்பு கடந்த வருடத்தின் செலவாக செலுத்தப்படாதிருக்க வேண்டுமென்றிருந்தாலும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்படாதிருந்த ரூபா. 70,770 பெறுமதியான செலவுக்காக 2021 வருடத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2.3 வங்கிக் கணக்குகளின் தொழிற்பாடு

(அ) குறிப்பு (VIII) 2021.12.31 ஆம் திகதிக்கு வங்கிக் கணக்கு பற்றிய அறிக்கை

நிதிக்கூற்றுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு (VIII) 2020.12.31 ஆம் திகதிக்கு வங்கிக் கணக்கு நிலைமை பற்றிய அறிக்கை தொடர்பான மாதிரிப்படிவ திகதி 2019 டிசம்பர் 31 என குறிப்பிடப்படிருந்தது. மேலும், 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வங்கிக் கூற்றுக்கேற்ப மீதி ரூபா. 2,334,402 என காட்டப்பட்டிருந்தாலும் அத்திகதிக்குரிய சரியான மீதி ரூபா. 17,759,887 ஆக இருந்தது.

(ஆ) தொலைந்த காசோலைகள்

(i) 2020 மார்ச் 24 ஆம் திகதியுடைய ரூபா. 46,600 பெறுமதியான 751867 ஆம் இலக்க காசோலையை இரத்துச்செய்து அதற்குப் பதிலாக 752077 ஆம் இலக்க காசோலை வழங்கப்பட்டிருந்ததோடு இரத்துச்செய்த காலோலைக்கான கொடுப்பனவை நிறுத்துமாறு 2020 டிசம்பர் 08 ஆம் திகதி இலங்கை வங்கி முகாமையாளருக்கு அறிவித்திருந்தாலும் நிதிப் பிரமாணங்களின் 393(1) பந்தியின் பிரகாரம் பெற வேண்டிய வங்கி உறுதிப்படுத்தல் பெற்றிருக்கவில்லை.

(ii) இக்காசோலையை தொலைந்த காசோலை எனக் கருதி நிதிப் பிரமாணங்களின் 392 (ஆ) பந்தியின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றிருந்தாலும் அதன் ii மற்றும் iii இல் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணங்களின் 392 (ஆ) iii இல் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுக் காப்புறுதி முறியினை பெற முடியாதிருப்பின் நிதிப் பிரமாணங்களின் 393 (2) இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றிருந்தாலும் அத்தேவைப்பாடும் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பத்தில் 752077 என் இலக்க காசோலை வழங்கப்பட்டிருந்தது.

(இ) வங்கி மேலதிகப் பற்றுக் கட்டணங்கள்

நிதிப் பிரமாணங்களின் 387 ஆம் பந்தியின் பிரகாரம் எந்தவொரு அரசாங்க வங்கிக் கணக்கிலிருந்தும் வங்கி மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்வது தடைசெய்யப்பட்டிருந்தாலும் கடந்த வருடத்தின் டிசம்பர் 20 மற்றும் 30 ஆம் திகதிகளில் செலவுத் தலைப்பின் வங்கி நடைமுறைக் கணக்கில் முறையே ரூபா. 3,757,495 மற்றும் ரூபா. 4,901,237 பெறுமதியான வங்கி மேலதிகப் பற்றுத் தொகைகள் இருந்ததுடன் அதற்காக வங்கியினால் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி ரூபா. 8,030 வங்கி மேலதிகப் பற்றுக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது. அத்துடன், மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற வருடத்தின் ஆரம்பத்தில் வங்கி நடைமுறைக் கணக்கின் வங்கி மேலதிகப் பற்று ரூபா. 5,030 ஆக இருந்ததோடு வங்கி மேலதிகப் பற்றுக் கட்டணமாக ரூபா. 200 அறவிடப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியுடைய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 10.2 பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கேற்ப வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

3.2 பெறுகை முகாமைத்துவம்

(அ) 14 மடிகணினிகளின் கொள்வனவுக்காக ரூபா. 2,989,000 வும் 14 மேசைக் கணினிகளின் கொள்வனவுக்காக ரூபா. 2,529,352 வும் செலுத்தும் போது குறித்த நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்டிருந்த ப்ரோபோமா இன்வொய் இனை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. என்றாலும், இக்கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகள் 2021 பெப்ரவரி மாதத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வாகனத்தின் கியர் முறைமையின் பழுதினை திருத்துவதற்காக குறித்த முகவர் நிறுவனத்தினால் 2018 ஜூன் 14 ஆம் திகதி ரூபா. 2,240,269 பெறுமதியான செலவு மதிப்பீடு வழங்கப்பட்டிருந்தது. குறித்த திருத்தத்துக்காகவே 2020 செப்தம்பர் 29 ஆம் திகதி ரூபா. 3,442,148 பெறுதியான செலவு மதிப்பீடு மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. பின்னர், 2020 டிசம்பர் 11 ஆம் திகதி வேறொரு நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா. 1,891,250 பெறுமதியான செலவு மதிப்பீட்டுக்கு திருத்தத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மோட்டார் வாகனப் பொறியியலாளர் இந்த வாகனத்தினை திருத்திய பின்னர் செலவு மதிப்பீட்டினை முன்வைத்த நிறுவனம் பொருத்தமானது என சிபாரிசு செய்திருந்ததுடன் அது முழுமையான அவதானிப்பின் கீழ் திருத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறிருப்பினும், 2021 பெப்ரவரி 21 ஆம திகதியிலும் குறித்த வாகனத்தின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. என்றாலும், மதிப்பிடப்பட்டிருந்த செலவினப் பெறுமதியான ரூபா. 1,891,250 2020 டிசம்பர் 31 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. என்றாலும், இந்தக் காசோலை 2021 பெப்ரவரி மாதத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை எனக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2020 ஒக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடாந்த தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுக் கூட்டங்களின் 14 தீர்மானங்களுக்கு ஒவ்வொரு அங்கத்தவர்களின் இணக்கப்பாட்டினை 2021 பெப்ரவரி 15 ஆம திகதி வரை பெற்றிருக்கவில்லை.

எம்.ஜீ.பீ.பீ.பீ பெர்னாந்து

உதவிக் கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் அதிபதிக்காக.

அத்தியாயம் 04 –

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (அமுலாக்கல் திட்டத்தின் அடிப்படையில்)

பொருந்தாது.

05. அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடவும்

பொருத்தமற்றது

அத்தியாயம் - 06

6. மனிதவள முகாமைத்துவ விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்/ (மிகை)
சிரேஷ்ட			
உயர் நீதிமன்றம்	17	17	-
மேன்முறையீட்டு நீதிமன்றம்	20	20	-

6.2 ** மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றதென சுருக்கமாக குறிப்பிடவும்.

பொருந்தாது.

6.3 மனித வள விருத்தி
பொருந்தாது.

07. அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதெனின் அதனை சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை.
1	கீழே குறிப்பிடுகின்ற நிதிக்கூற்றுகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
1.1	வருடாந்த நிதி அறிக்கை.	இணக்கமானது		
1.6	வேறு			பொருத்தமற்றது
2	புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பேணல் (நி.பி. 445)			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்து பேணிவரல்.	இணக்கமானது.		
2.2	தனிநபர் வேதனாதி பதிவுகள்/ தனிநபர் வேதனாதி அட்டைகளை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கையை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்	இணக்கமானது.		
2.7	பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிவரல்	இணக்கமானது.		
2.8	இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.9	இழப்பு பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.10	பொறுப்பு பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GAN20) பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		

03	**நிதிகட்டுப்பாட்டு செயற்பாடுகளுக்காக அதிகாரமளித்தல். (நி.பி 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்துக்குள் பகிரப்பட்டுள்ளன.	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்களை அதிகாரமளிப்பது தொடர்பாக நிறுவனத்துக்குள் அறிவுறுத்துதல்.	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களால் அங்கீகரிக்கும் விதத்தில் அதிகாரமளித்தல்.	இணக்கமானது		
3.4	171/2004 ஆம் இலக்க 2014.05.11 ஆந் திகதியுடைய சுற்றுநிருபத்துக்கேற்ப அரச சம்பளப் பட்டியல் மென்பொருள் பொதியை கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பயன்படுத்துதல்.	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்.**			
4.1	வருடாந்த செயல்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தை தயாரித்தல்.	இணக்கமானது		
4.3	மீளாய்வுக்கு உட்படுத்துகின்ற வருடத்துக்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத்திட்ட அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொளள்ளல்.			
4.4	வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்.			பொருத்தமற்றது
4.5	வருடாந்த மதிப்பீட்டைத் தயார்செய்து தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துக்கு உரிய திகதிக்கே முன்வைத்தல்.	இணக்கமானது		
4.5	வருடாந்த நிதிப்பாய்ச்சல் கூற்றை திறைசேரி செயற்பாட்டு	இணக்கமானது		

	திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.			
4.7	காலாண்டுகளின் அறிக்கைகளை உரிய திகதிக்கே திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.			
5.	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் விதந்துரைத்துள்ள திகதியில் அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் பதில் வழங்கபட்டுள்ளது.	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி. பி 134(2) DMA/1-2019 க்கு இணங்க வருடத்தின் ஆரம்பத்திலேயே கணக்காய்வாளர் நயாகத்துடன் கலந்துரையாடிதன் பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயார்செய்தல்.			பொருத்தமற்றது
6.2	சகல கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதிலளித்தல்.			பொருத்தமற்றது
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப உறுப்புரையின் படி அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல்.			பொருத்தமற்றது
6.4	நி.பி 134(3) இன் படி, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.			பொருத்தமற்றது
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			பொருத்தமற்றது
7.1	DMA/1-2019 க்கு இணங்க குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை குறித்த வருடத்தினுள் நடத்தயிருத்தல்.			பொருத்தமற்றது
8	ஆதன முகமைத்துவம்			

8.1	01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 07 வது அத்தியாயத்துக்கு அமைவாக ஆதனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் அழித்தல் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
8.2	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 13 ஆவது உறுப்புரைக்கு அமைவாக அச்சுற்றுநிருபத்தின் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தவும் இணைப்புச் செய்வதற்கும் பொருத்தமான ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு அவர் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்துக்கு அறிக்கைப்படுத்தியிருத்தல்.	இணக்கமானது		
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்துக்கு அமைவாக பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி குறித்த அறிக்கையை குறித்த திகதிக்கு கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை.	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் குறிப்பிடப்பட்ட மேலதிகம், பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகளை சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் நிறைவேற்றியிருத்தல்.	இணக்கமானது		
8.5	நி.பி 772 க்கேற்ப கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றியிருத்தல்.	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்.**			
9.1	ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயாரித்து குறித்த திகதியில்			பொருத்தமற்றது

	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்தல்.			
9.2	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு ஆறு மாதத்துக்கும் குறைவான காலத்தினுள் விற்றொழித்திருத்தல்.	இணக்கமானது		
9.3	வாகன லொக் குறிப்பு புத்தகத்தை இற்றைப்படுத்தி பேணுதல்.			பொருத்தமற்றது.
9.4	அனைத்து வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி. 103, 104, 109 மற்றும் 110 க்கேற்ப செயற்படுதல்.	இணக்கமானது		
9.5	2016/30 ஆம் இலக்க 2016.12.29 ஆந் திகதியுடைய பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் 3.1 உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்க வாகனங்களின எரிபொருட் பாவனையை பரிசீலனை செய்தல்.			பொருத்தமற்றது.
9.6	குத்தகை காலத்தின் பின்னர் குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகங்களை முழுமையாக மாற்றுதல்.			பொருத்தமற்றது.
10	**வங்கிக்கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியில் வங்கிக்கணக்கிணக்கக் கூற்றை தயார்செய்து சான்றுபடுத்தி அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
10.2	மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்திலோ அல்லது அதற்கு முன்னருள்ள வருடங்களிலிருந்து முன்கொணரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளை தீர்த்துவைத்தல்.			பொருத்தமற்றது
10.3	வங்கிக்கணக்கிணக்க கூற்றுக்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்ய வேண்டிய நிலுவைகள் தொடர்பாக நிதி விதிமுறைகளுக்கேற்ப	இணக்கமானது		

	செயற்பட்டு ஒரு மாத காலத்தினுள் அந்நிலுவையை தீர்த்தல்.			
11	**நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**			
11.1	ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் வரையறைகளை மீறாது செலவுகளை மேற்கொள்ளல்.	இணக்கமானது		
11.2	நி. பி 94(1) இற்கேற்ப ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து செலவு செய்ததன் பின்னர் வருட இறுதியில் நிலுவையிலுள்ள நிதி ஒதுக்கீடுகளின் வரையறையை மீறாத பொறுப்புக்கள்.	இணக்கமானது		
12.	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்.	இணக்கமின்மை		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவைகள் தொடர்பாக கால பகுப்பாய்வினை நடத்தியிருத்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலதிகமான கடன் நிலுவைகளை தீர்திருத்தல்.	இணக்கமானது.		
13.	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 க்கு இணங்க நடவடிக்கை எடுத்திருத்தல்.			பொருத்தமற்றது
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை இற்றைப்படுத்தி பேணிவரல்.			பொருத்தமற்றது
14	**பணி முற்பணக்கணக்கு**			
14.1	மீளாய்வு வருடத்தின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியானது திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
14.2	நி.பி 371 க்கேற்ப வழங்கப்பட்ட தேவை நிமித்த உப-பணி முற்பணமானது குறித்த செயற்பாடு முடிவடைந்து ஒரு மாதகாலத்தினுள் தீர்க்கப்பட்டது.	இணக்கமானது		

14.3	நி.பி 371 க்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சாதவாறு தேவை நிமித்த பணி முற்பணம் வழங்கபட்டிருத்தல்.	இணக்கமானது		
14.4	பணி முற்பண கணக்கின் மீதியை திறைசேரியின் புத்தகத்துடன் மாதாந்தம் ஒப்புநோக்கல்.	இணக்கமானது.		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய விதிமுறைகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானங்களிலிருந்து மீளசெலுத்தப்பட வேண்டியவை செலுத்தப்பட்டன.			பொருத்தமற்றது.
15.2	திரட்டியிருந்த வருமானத்தை வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமானத்துக்கு வரவு வைத்தல்.			பொருத்தமற்றது.
15.3	நிபி. 176 க்கு அமைவாக வருமான நிலுவை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.			பொருத்தமற்றது.
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எல்லைக்குள் ஆளணியை நிர்வகிகத்தல்.			பொருத்தமற்றது.
16.2	அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலமான கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருத்தல்.			பொருத்தமற்றது.
16.3	20.09.2017 ஆந் திகதியுடைய 04/2017 ஆம் இலக்க எம்.எஸ்.டீ சுற்றுநிருபத்துக்கமைவாக அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.			பொருத்தமற்றது.
17	**பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்.**			
17.1	தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு சிறந்த தகவல் பதிவேடு நிர்வகிக்கப்படுவதுடன் அது தகவலறியும் உரிமை	இணக்கமானது.		பொருத்தமற்றது.

	மற்றும் விதிமுறைகளுக்கிணங்க இற்றைப்படுத்தப்படுகின்றது.			
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் வலைத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன் வலைத்தளத்தினூடாகவோ அல்லது மாற்று வழிகளினூடாகவோ நிறுவனம் தொடர்பான மக்களின் பாராட்டுக்கள்/ குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை மேற்கொண்டிருத்தல்.	இணக்கமானது.		பொருத்தமற்றது.
17.3	தகவலறியும் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் உறுப்புரைகளுக்கு அமைவாக வருடத்துக்கு இருமுறை அல்லது வருடத்துக்கு ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தில்.	இணக்கமானது.		பொருத்தமற்றது
18	**பிரசைகள் சாசனத்தை அமுல்படுத்துதல்.**			
18.1	பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2008 (1) ஆம் இலக்கங்களுடைய சுற்றுநிருபங்களுக்கமைவாக நிறுவனத்தினால் பிரசைகள் சாசனம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.			பொருத்தமற்றது
18.2	சுற்றுநிருபத்தின் 2.3 பந்திக்கு அமைவாக பிரசைகள் சாசனம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை கண்காணிக்கவும் மதிப்பிடவும் ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது.			பொருத்தமற்றது.
19	**மனிதவள திட்டத்தைத் தயாரித்தல்.**			
19.1	2018.01.24 ஆந் திகதியுடைய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02 ஆம் மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் மனித வள			பொருத்தமற்றது

	திட்டமொன்று தயார்செய்துள்ளமை.			
19.2	ஆளணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடத்துக்கு 12 மணித்தியாலங்களுக்கு குறையாத விதத்தில் பயிற்சி வாய்ப்புக்கள் மேற்குறிப்பிட்ட மனிதவள திட்டத்தினுள் உள்ளடக்கியுள்ளமை.			பொருத்தமற்றது
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் மொத்த ஆளணியினருக்கும் வருடாந்த செயற்சாதனை உடன்படிக்கை கைசாத்திட்டிருத்தல்.			பொருத்தமற்றது.
19.4	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 6.5 பந்திக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயார்செய்தல், இயற்றிறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்ற பொறுப்புக்களுக்கு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருத்தல்.			பொருத்தமற்றது
20	**கணக்காய்வு பதிவுகளுக்கான துலங்கல்**			
20.1	முந்திய வருடத்துக்காக கணக்காய்வாளரால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளன.	இணக்கமானது.		